மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | STC 150/2022 |
| பெயர் | : | ரமேஷ் (PW1) |
| த/பெ. | : | கருப்பசாமி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A1 Anthonyraj, A2 Aswinjonesranjith are present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 30613 (Central Act 1616 of 30613) on the 20th day of June 2023

**முதல் விசாரணை**

1) நான் ஓட்டப்பிடாரம் 40 வீட்டு லைனில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டுராக உள்ளேன். சாட்சி சுகன்யா என் மனைவி. சாட்சி வள்ளியம்மாளை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும்.

2)என் வீட்டு நாய் எதிரியின் வீட்டின் பூனையை கடித்ததாக சொன்னார்கள். ஆனால் எங்கள் நாய் கேட்டை விட்டு வெளியே செல்லவில்லை. 23.6.2018 ம்தேதி மதியம் 2.15 முதல் 2.40 மணிவரை நான் வீட்டில் இருந்தபோது எதிரிகள் இருவரும் என்னிடம் சண்டைக்கு வந்து தேவிடியாமனே புண்டாமகனே என்று அசிங்கமாக பேசி இருவரும் என்னை நெஞ்சில் குத்தினார்கள்.

3)அரிவாள் கம்பை வைத்து என்னை நெஞ்சில் குத்தினார்கள். செருப்பை வைத்து 2வது எதிரிஅடித்தார். அரிவாள் கம்பை வைத்து என் பிடரியில் அடித்தார்கள். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.

4)என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையததுதான் (**மேற்படி புகார்மனு அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) சம்பவம் 2.15 மணியிலிருந்து 2.40 மணிவரை நடந்தது. என் வீட்டிற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே முக்கால் கிலோமீட்டர் தொலைவு இருக்கும் . நடந்து வந்தால் 10 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது நான் மட்டும் தான் புகார் கொடுக்க காவல் நிலையம் வந்தேன்.

2) நான் உடனடியாக புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். புகாரினை யார் எழுதியது என்றால் எனக்கு எழுத தெரியாததால் வேறு ஒருவரை வைத்து எழுதினேன். என்னிடம் காட்டப்படும் அசா ஆ 1 புகார் மனுவில் இன்று என்பதை திருத்தி நேற்று என்று மாற்றப்பட்டுள்ளது என்றாலும் 23 ம்தேதி 24 ம் தேதியாக மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் மாற்றவில்லை நான் கொடுத்த புகாரில் எதுவும் திருத்தப்படவில்லை.

3) புகார் மனுவில் கடைசி வரியிலும் திருத்தம் உள்ளது என்றால் சரிதான்.நான் கொடுத்த புகாரில் எந்த திருத்தமும் செய்யப்படவில்லை.என்னிடம் காட்டப்படும் அசா 1 புகார் மனு நான் கொடுத்தது இல்லை என்றால் சரிதான், நான் கொடுத்ததில் அடித்து அடித்து எழுதியுள்ளார்கள். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான்.

4) நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் புகார்மனு எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.